சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

முன்னிலை: **திருமதி.P மோகனவள்ளி, B.A., M.L.,**
சார்பு நீதிபதி பொள்ளாச்சி

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாள் செவ்வாய்கிழமை
(2053 திருவள்ளுவராண்டு ஸ்ரீபிலவ வருடம் தைத் திங்கள் 17 ம் நாள்)
இடை மனு எண்.2/2019
–in–
அசல் வழக்கு எண்.389/2019

T.கனகராஜ் ....மனுதாரர்/ வாதி

/எதிராக/

R.நவநீதகிருஷ்ணன் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது, கடந்த 19.01.2023 ஆம் தேதியன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றபோது, மனுதாரர்/வாதிக்காக வழக்கறிஞர் திரு.N.சின்னத்துரை அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/ பிரதிவாதி திரு.R.வினுராஜ் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உ த் த ர வு

1) இம்மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் வகுமுறை 38 விதி 5 ன் கீழ் வாதியானவர் எதிர்மனுவாதிக்கு ரூ.3,51,000/–க்கு தக்க ஜாமீன் உடனடியாக ஒப்படைக்கும் படியும் இல்லாவிடில் மனுச்சொத்துக்களை மேற்படி அசல் வழக்கின் தீப்புக்கு முன் ஜப்தி செய்து உத்தரவிட்டும் இம்மனுவின் விசாரணை முடியும் வரை இடைக்கால முன் ஜப்தி செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனு பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம் :–

மனுதார் அசல் வழக்கில் இடைக்கால முன் ஜப்தி செய்ய பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுவாதி கடந்த

01.06.2018 ம் தேதி மனுதாரரிடம் கடனாக ரொக்கம் ரூ.3,00,000/-(ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு 12% வீதம் வட்டி சேர்த்து தருவதாகவும் கூடுகின்ற வட்டியையும், அசலையும் மனுதாரர் வேண்டும் பொழுது மனுதாரருக்கோ அல்லது அவரது உத்தரவு பெற்றவர்களுக்கோ கொடுப்பதாக உறுதியளித்து அதற்கு ஆதரவாக எதிர்மனுவாதி மனுதாரர் பெயருக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தார். எதிர்மனுவாதியிடம் கடன் தொகைக்கான அசல் மற்றும் வட்டித் தொகைகளை திருப்பித் தரக்கோரி பலமுறை நேரில் கேட்டும் மேற்படி பிராமிசரி நோட்டுக்குண்டான அசல் மற்றும் வட்டித் தொகைகளை திருப்பிச் செலுத்தாமல் எதிர்மனுவாதி வீண் காலம் கடத்தி வந்தார். எதிர்மனுவாதி ஷை பிராமசரி நோட்டுக்கான அசல் மற்றும் வட்டித் தொகைகளை திருப்பி செலுத்தாததால் மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 28.09.2019 ம் தேதி பதிவுத் தபால் மூலம் அறிவிப்பு அனுப்பியதை எதிர்மனுவாதி 03.10.2019 ம் தேதி பெற்றுக்கொண்டார். அதன் பின்னிட்டும் எதிர்மனுவாதி இதுநாள் வரை பணமோ அல்லது பதில் அறிவிப்போ எனக்கு கொடுக்கவில்லை. பின்னிட்டு தான் நீதிமன்றத்தில் தாவா தாக்கல் செய்வதை அறிந்த எதிர்மனுவாதி தாவா தொகையை மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் அவருக்கு பாத்தியப்பட்ட மனுச் சொத்தை 3 ம் நபருக்கு கிரயம் செய்து முயற்சி செய்து வருகிறார். அவ்வாறு மனுச் சொத்தை கிரயம் செய்து கொடுத்துவிட்டால் மனுதாரர் தாவா தொகையை வசூல் செய்ய இயலாமல் போய்விடும். மேற்படி எதிர்மனுவாதி அவருடைய செயலில் வெற்றி பெறும் பட்சம் ஷை வழக்கில் மனுதாரர் டிக்ரி பெற்றாலும் அதன் முழு பலனை அடைய நிறைவேற்று மனு செய்து பணம் வசூலிக்க வேறுமார்க்கம் இல்லாமல் போய்விடும். எனவே மனுதாரர் நீதிமன்றத்தில் முன் ஜப்தி அல்லது முன் ஜாமீன் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுப்படி உத்தவாக வேண்டும் என்பதாகும்.

3) <u>எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>:-

மனுவானது பொய்யானது புனைந்துரைக்கப்பட்டது. சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுவாதி எந்த பணமும் வாங்கவில்லை, பிராமிசரி நோட்

எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. எதிர்மனுவாதி எந்த சொத்தையும் விற்கவில்லை. அவ்வாறு சொத்தை விற்பதற்கு அவசியமும் இல்லை. மனுவாதியிடம் எந்த பத்திர நகலும் கொடுக்கவில்லை. மனுவாதி எதன் மூலமாக எழுதி கையெழுத்து செய்து பணத்தை கொடுத்தார் என்ற விபரம் குறிப்பிடவில்லை. ஆகையால் எதிர்மனுவாதி எந்த கையெழுத்தும் போடவில்லை. எதிர்மனுவாதி மனுவாதியிடம் பணம் வாங்கவில்லை. எனவே சொத்துககளை ஜாமீனாக அட்டாச்மென்ட் செய்யவோ முன்ஜப்தி செய்யவோ கூடாது. எதிர்மனுவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் இந்த எதிர்மனுவாதியை அலைகளிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் பொய்யான காரணங்களை சொல்லி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

4) இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி, இம்மனு அனுமதித்து உத்தரவிட வேண்டுமா? என்பதாகும்.

6) a) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதியானவர். அசல் வழக்கானது கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் எதிர்மனுதாரர் 01.06.2018 ம் தேதி அவசர குடும்ப தேவைக்காக வியாபார செலவுக்காகவும் வேண்டி பெற்றதாகவும் எதிர்மனுதாரர் தொகை எதுவும் செலுத்தவில்லை என்பதால் மனுதாரர் 28.09.2019 ம் தேதி அறிவிப்பு அனுப்பியதை எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதாகவும், எதிர்மனுதாரர் மூன்றாம் நபருக்கு வில்லங்கத்திற்கு உட்படுத்த முயற்சி செய்வதாகவும் அவ்வாறு செய்யும் பட்சத்தில் மனுதாரருக்கு தாவா தீர்ப்பு செய்யும் பட்சத்தில் கிடைக்க வேண்டி தொகை கிடைக்காமல் போய்விடும் என்றும் எனவே மனுவை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய வேண்டுமென்று வாதிடப்பட்டது.

b) மனுதாரர் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.395/2019 வழக்கில் மனுதாரரால் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள கடனுறுதிச் சீட்டின் பேரில் எதிர்மனுதாரர், மனுதாரரிடம்

ரூ.3,00,000/– கடன் பெற்றுக் கொண்டு 01.06.2018 ம் தேதி கடன் பெற்றதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி தேதியில் கடன் பெறவில்லை என்பதற்கு எந்த ஆதரவையும் தாக்கல் செய்யவில்லை. மாறாக தான் மனுதாரரிடம் கடன் பெறவில்லை என்றும், எந்த ஆவணத்திலும் கையெழுத்து செய்யவில்லை என்று மட்டும் எதிருரையில் தெரிவித்துள்ளாரே தவிர தான் மனுதாரரிடம் புரோ நோட்டு எழுதி கொடுத்து எந்த கடனும் பெறவில்லை என்பதை ஆவண சாட்சியம் மூலமோ, சாட்சியம் மூலமோ நிரூபிக்கவில்லை. எனவே மனுதாரரிடமிருந்து, எதிர்மனுதாரர் கடன் பெற்றுள்ளாரா? அல்லது கடனுறுதிசீட்டு சீட்டு தொகைக்கு ஆதரவாக எழுதி கொடுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து அசல் வழக்கில் மட்டுமே தீர்வு காண முடியும். இம்மனுவில் தாவா தீர்ப்பு அளிக்கப்படும் பட்சத்தில் தீர்ப்பு தொகையை பெற வேண்டி எதிர்மனுதாரரின் சொத்தினை ஜப்தி செய்ய வேண்டுமென தெரிவித்துள்ள நிலையில் அதை மறுத்து எதிர்மனுதாரர் யாதொரு சான்றாவணங்களும் தாக்கல் செய்யாத நிலையில் மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7) முடிவாக மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது. மனுச்சொத்தை பற்றுகை செய்ய வாய்தா 18.04.2023. படி கட்ட வாய்தா 2 நாட்கள்.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023–ம் வருடம் ஜனவரி மாதம் 31 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

sd./P.Mohanavalli
சார்பு நீதிபதி, பொள்ளாச்சி

<u>இரு தரப்பு சாட்சி</u> :இல்லை
<u>இருதரப்பு சான்றாவணங்கள்</u> : இல்லை

sd./P.Mohanavalli
சார்பு நீதிபதி, பொள்ளாச்சி